DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : ராஜலட்சுமி | Father Name : சூர்யக்குமார் |
| Age : 46 | Village : திருமங்கலம் |
| Taluk : | Calling : ஆசிரியர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23 Mar 2026 13:09

Both parties are present

**முதல் விசாரணை** :-

1. நான் திருமங்கலம் அருகேயுள்ள தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கு எதிரி தமிழ்மணியை எனக்கு தெரியும். இந்த வழக்கு வாதி சக்தி முருகனை எனக்கு தெரியாது. (ஆனால் சாட்சி நீதிமன்றத்தில் முன்னிலையாகி உள்ள இந்த வழக்கு வாதியை பார்த்து அவருக்கு சாத்தூர் என்றும், அவரை தெரியும் என்றும் கூறுகிறார்)

2. திருமங்கலத்தைச் சார்ந்த செல்வகணேஷ் மற்றும் அவருடைய தாயார் 15.03.2022 ஆம் தேதி என்னிடம் கடனாக ரூபாய் 10,00,000/- கேட்டார்கள். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்பதால் நான் இந்த வழக்கு எதிரான தமிழ்மணி தொழில் செய்து வருவதால் அவரிடம் பணம் இருக்கும் என்று கூறி அவரிடம் பணத்தை கேட்டேன். அவரும் அவரிடம் பணம் இல்லை என்று கூறி, அவர் பணம் வாங்கும் சாத்தூரில் உள்ள ஒருவரிடம் பணம் இருக்கிறதா என்று கேட்டு சொல்வதாக கூறினார். தமிழ்மணி சாத்தூரில் பணம் வாங்கும் நபரிடம் கேட்டு, அவர் பணம் தருவதாக கூறியதாக என்னிடம் கூறினார்.

3. 29.03.2022 ஆம் தேதி நான், தமிழ்மணி மற்றும் செல்வகணேஷ் ஆகிய மூன்று பேரும் சாத்தூரில் உள்ள வாதியின் வீட்டிற்கு மதியம் சுமார் 12.00 மணிக்கு சென்றோம். வாதி அவருடைய வீட்டில் அவரிடம் ரூபாய் 10,00,000/- பணம் இல்லை என்றும், ரூபாய் 5,00,000/- மட்டும் கடன் கொடுக்க முடியும் என்றும் கூறி செல்வகணேசிடம் ரூபாய் 5,00,000/-த்தை கடனாக கொடுத்தார். அதற்காக செல்வ கணேஷ் ஒரு கடனுறுதி செய்து மற்றும் ஒரு காசோலையை வாதியிடம் கொடுத்தார். அப்பொழுது வாதி அவருடைய ரெகுலர் கஸ்டமரான தமிழ்மணியிடமும் ஒரு காசோலையை வாங்கிக் கொண்டார். அப்பொழுது செல்வகணேஷ் வாதியின் வங்கி கணக்கில் நேரடியாக பணத்தை வட்டியுடன் திருப்பி செலுத்திவிடுவதாக கூறி சென்றோம். செல்வகணேஷ் வாதியின் வங்கி கணக்கு நேரடியாக பணத்தை செலுத்தி வந்தார்.

4. கடைசி ஓர் ஆண்டாக அவர் பணம் கொடுக்கவில்லை என்பதால் நானும் தமிழ்மணியும் செல்வகணேஷ் வீட்டிற்கு சென்று பணம் ஏன் கொடுக்கவில்லை என்று பஞ்சாயத்து பேசினோம். வாதி தமிழ்மணி மீது இந்த நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்ததால் நாங்கள் செல்வகணேசன் மீது திருமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். தற்போது வரை அந்த புகார் திருமங்கலம் காவல் நிலையத்தில் விசாரணையில் இருந்து வருகிறது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :–

5. எதிரி தமிழ்மணி என்னை இன்று நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வருமாறு கேட்டுக் கொண்டதன்படி நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் 2022 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் எம்.எஸ்.சி., எம்.எட்., படித்துள்ளேன். இந்த வழக்கு எதிரி தமிழ்மணியை எனக்கு நன்கு தெரியும் என்றால் பழக்கத்தின் அடிப்படையில் தெரியும்.

6. செல்வகணேசன் அப்பா மாரிச்செல்வத்தை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றியவர், எங்களுடைய பக்கத்து ஊர்காரர் ஆவார். மாரிச்செல்வத்திற்கு இரண்டு மனைவி என்றால் சரிதான். மாரிச்செல்வத்தின் மகன் செல்வகணேஷ் இல்லை என்றால் சரியல்ல, மாரிச்செல்வத்திற்கும் முருகேஸ்வரி என்பவருக்கும் பிறந்த குழந்தை செல்வகணேஷ் ஆவார். முருகேஸ்வரிக்கு ஏற்கனவே திருமணமாகி இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. முருகேஸ்வரிக்கும் அவருடைய முதல் கணவரும் பிறந்த குழந்தைதான் செல்வகணேஷ் என்றால் அது அவர்களின் தனிப்பட்ட விபரங்கள் எனக்கு தெரியாது.

7. முருகேஸ்வரி என்ன வேலை செய்கிறார் என்றால் அரசு பள்ளியில் சத்துணவு ஆசிரியராக இருப்பதாக கேள்விப்பட்டேன். தற்போது முருகேஸ்வரி எங்கே குடியிருந்து வருகிறார் என்றால் கற்பகம் நகரில் குடியிருந்து வருகிறார். செல்வகணேஷுக்கு திருமணமாகிவிட்டதா என்றால் தெரியவில்லை, அவருக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 25 முதல் 27 வயது இருக்கும். அவர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் தொழில் செய்து வருகிறார், என்ன தொழில் என்று எனக்கு தெரியாது. நான் செல்வகணேஷ் மற்றும் அவருடைய தாயார் முருகேஸ்வரியை எனக்கு நன்கு தெரியும் என்று வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

8. நான் பணத்தை வட்டிக்கு கொடுக்கும் வேலை செய்தேனா என்றால் இல்லை. எதற்காக செல்வகணேஷ் பணம் கேட்டார் என்றால் அவருக்கு வேலை வாங்க வேண்டும் என்பதற்காக கேட்டார். ஆகையால் நான் எதிரி தமிழ்மணியிடம் பணம் கேட்டேன் என்றால் அவர் எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவரிடம் அழைத்துச் சென்றேன். நான் அதற்கு முன்பு தமிழ்மணியிடம் பணம் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. தமிழ்மணியை எனக்கு 10 ஆண்டுகளாக தெரியும். அவரை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நாங்கள் பக்கத்து தெருவில் குடியிருக்கிறோம். அவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். நான் தமிழ்மணியிடம் நிலம் எதுவும் வாங்கியதில்லை.

9. சாத்தூரில் ஒரு நபர் பணம் கொடுக்கிறார் என்று நான் கூறியுள்ள விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் எத்தனை முறை தமிழ் மணியுடன் சாத்தூரில் பணம் வாங்குவதற்காக சென்றுள்ளேன் என்றால் செல்வகணேசிற்கு பணம் வாங்கிக் கொடுத்த ஒருமுறை மட்டும்தான் சென்றேன். சாத்தூரில் பணம் வாங்கி கொடுத்த நபரின் வீட்டு முகவரியை என்னால் தற்போது கூற முடியும் என்றால் நான் ஒருமுறைதான் சென்றேன் என்பதால் அதை என்னால் கூற முடியாது. அந்த நபரின் வீடு வாசல் எந்த திசையை நோக்கி இருக்கிறது என்றால் சரியாக தெரியவில்லை. அந்த நபரின் வீட்டில் சிசிடிவி கேமரா இருக்கிறதா என்பதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. வாதியின் வீட்டு முகவரி, வீடு எந்த திசையை நோக்கி இருக்கிறது போன்ற விபரங்கள் எனக்கு தெரியாத நிலையில் நான் அவருடைய வீட்டிற்கு சென்றதாக பொய்யாக கூறுகிறேன்

என்றால் சரியல்ல.

10. சாத்தூருக்கு யாரெல்லாம் சென்றோம் என்றால் நான், தமிழ்மணி மற்றும் செல்வகணேஷ் ஆகிய மூன்று பேரும் சென்றோம். வேறு யாரும் எங்களுடன் வந்தார்களா என்றால் இல்லை. ரூபாய் 10,00,000/- வாங்குவதற்காக தான் நாங்கள் சாத்தூருக்கு சென்றோம் என்றால் எவ்வளவு தொகை தருவதாக வாதி கூறினார் என்பது எனக்கு தெரியாது. நாங்கள் வாதியின் வீட்டிற்கு சென்றபோது அவர் ரூபாய் 5,00,000/- கொடுத்தார் என்றால் சரிதான். அப்பொழுது செல்வ கணேஷ் கடனுறுதிச் சீட்டு மற்றும் காசோலையை நிரப்பி கொடுத்தார், எதிரியிடம் இருந்தும் ஒரு காசோலையை வாங்கிக் கொண்டார். கடனுறுதிச் சீட்டில் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை.

11. செல்வகணேஷ் எந்த வங்கி மூலமாக பணம் செலுத்தினார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. செல்வகணேஷ் வாதிக்கு பணம் கொடுப்பதாக என்னிடம் எதுவும் கூறினாரா என்றால் இல்லை. தமிழ்மணி கொடுத்த காசோலையில் யார் கையொப்பம் செய்து கொடுத்தார் என்றால் தமிழ்மணி கையொப்பம் செய்து கொடுத்தார். அது எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். தமிழ்மணியின் காசோலையில் உள்ளது அவருடைய கையெழுத்து தான் என்றால் சரிதான். தமிழ்மணி அனுப்பிய அறிவிப்பில் வாதி பணம் கொடுக்கும் போது நான் உடன் சென்றதாக கூறாத நிலையில் தற்போது தமிழ்மணி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. செல்வகணேஷ் மற்றும் முருகேஸ்வரி ஆகியோர்களை யாரென்று எனக்கு தெரியாது என்றாலும், அவ்வாறு தெரிந்திருந்தால் அவர்களும் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்திருப்பார்கள் என்றாலும் சரியல்ல.

12. நான் தமிழ் மணிக்கு ஆதரவாக அவர் கேட்டுக்கொண்ட படி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. செல்வகணேஷும் சாட்சியம் அளிக்க வருவதாக கூறியுள்ளார்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

23 Mar 2026 13:41

Judicial Magistrate 2, Sattur.